II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 522 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12/08/2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Manimaaran | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை=</u>

எனது மாத சம்பளம் ரூ.30,000/- ஆகும். நான் உரிமம் பெற்ற பைனான்சியரா என்றால் இல்லை. நானும் பிரதிவாதியும் நண்பர்கள். நண்பர்களான பிறகு தான் எங்களுக்குள் பணம் கொடுக்கல் வாங்கல் ஏற்பட்டது. நாங்கள் 12 ஆண்டுகளாக நண்பர்கள். வீடுகளுக்கும் சென்று வருவோம். இருவரும் ஒரே இடத்தில் ஒன்றாக வேலைப்பார்க்கிறோம். நான் 27.02.2015ல் ரூ.3 லட்சம் கடன் கொடுத்த போது அந்த தேதியில் எந்த கடன் பத்திரமோ ஆவணமோ எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். கூட்டுறவு நாணயசங்கத்தில் இருந்து நம்பிக்கையின் பேரில் பிரதிவாதிக்கு கடன் எடுத்து கொடுத்தேன். அதேபோல் 18.05.2017 அன்று ரூ.2 லட்சம் கடன் கொடுத்த போது அந்த தேதியில் எந்த கடன் பத்திரமோ ஆவணமோ எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அப்போதும் கூட்டுறவு நாணயசங்கத்தில் இருந்து நம்பிக்கையின் பேரில் பிரதிவாதிக்கு கடன் எடுத்து கொடுத்தேன். அதேபோல் 08.02.2018 அன்றும் நான் ரூ.2 லட்சம் கடன் கொடுத்த போது அந்த தேதியில்

எந்த கடன் பத்திரமோ ஆவணமோ எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அப்போதும் கூட்டுறவு நாணயசங்கத்தில் இருந்து நம்பிக்கையின் பேரில் பிரதிவாதிக்கு கடன் எடுத்து கொடுத்தேன். அசலும் வட்டியும் சேர்த்து ரூ.11 லட்சம் ஆனதாக சொல்லும் நிலையில் பிரதிவாதி வட்டி கொடுக்கவே இல்லையா என்றால் கொடுத்திருக்கிறார். இன்று வரை வட்டியாக ரூ.1,50,000/- கொடுத்திருக்கிறார். வழக்குரையில் இதனை சொல்லவில்லை என்றால் சரியல்ல. ரூ.1,50,000/- வட்டியை என்னிடம் தான் கொடுத்தார். 2022 ஆம் ஆண்டு கொடுத்தார் என்றால் சரிதான். அப்படி எனில் 2017 மற்றும் 2018ல் நான் மீண்டும் இரண்டு முறை இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்க என்ன காரணம் என்றால் பிரதிவாதி முதலில் இருந்தே மாதம் மாதம் வட்டி கொடுத்து வந்தார். ரூ.100க்கு ரூ.1.50 வீதம் கொடுத்து வந்தார். எவ்வளவு தொகை என்று கணக்கு வைத்திருக்கவில்லை. வழக்குரையை எப்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் 22.09.2022ல் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கடன் பத்திரம் 17.02.2021ல் ஏற்படுத்தப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.1யை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டு பெற்ற கடனுக்கு 2021 ஆம் ஆண்டு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. காலவரையறைக்காக 2017 மற்றும் 2018ல் ஒரு பரிவர்த்தனையை காண்பித்து 2021ல் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.1,50,000/-யை அசலுக்காக தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. அசல் மற்றும் வட்டித்தொகைகான கணக்கீட்டை

வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 11.04.2022 பிறகு வட்டியோ அசலோ திருப்பி கொடுக்கவில்லை என்று சொல்லும் நிலையில் 2015க்கு பிறகு உரிய காலத்திற்குள் நான் அறிவிப்பு எதுவும் அனுப்ப வில்லை என்றால் எங்களுக்குள் கொடுக்கல் வாங்கல் சுமுகமாக இருந்ததால் அறிவிப்பு அனுப்பவில்லை. பிரதிவாதி 26.06.2022 அன்று ரூ.1,50,000/- திருப்பி கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு தான் நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதன் பிறகும் வழக்கும் தாக்கல் செய்துவிட்டேன். 2015ல் இருந்து 11.04.2022 வரை நான் பணம் கேட்டு எவ்வித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும் ஏன் என்றால் 2015 மற்றும் 2018ல் எந்த வித பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்பதால் தான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. அவர் மீதான நம்பிக்கையின் காரணமாக தொடர்ந்து பணம் கொடுத்துள்ளேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் நான் பிரதிவாதியிடம் இருந்து ரூ.1,50,000/- கடன் வாங்கியதாகவும் 21.03.2021 அன்று கடன் பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும் பிரதிவாதி பொய் வழக்கை ஜோடித்துள்ளதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதை பொய் என்பதை நான் தான் நிருபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி அறிவிப்பு அனுப்பியதால் தர்ன நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இல்லாவிட்டால் வழக்கு தாக்கல் செய்திருக்கமாட்டோம். நான் எனது வழக்குரையில் 2018ம் ஆண்டில் இருந்து தான் வட்டி கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

2021ம் ஆண்டில் இருந்து தான் கேட்டுள்ளேன். 2015 முதல் 2021 வரை எங்களுக்குள் எந்த பரிவர்த்தனையும் நடக்காததால் தான் அந்த காலத்திற்கு நான் வட்டி கோரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் 2015, 2017, 2018 ஆண்டுகளின் பரிவர்த்தனைப்பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் இரண்டு சதவீதம் என இருந்ததை 2பைசா என மாற்றி பிறகு இரண்டு ரூபாய் என மாற்றி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பக்கத்தில் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் கையொப்பத்தை போட்டு வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூ.3 லட்சம் மட்டுமே கடன் பெற்றுள்ளார் என்றும் அதில் ரூ.1,50,000/- திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்க முகாந்திரம் எதுவும் இல்லை என்றும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.